முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை: திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் ஜூலை மாதம் 11ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.7/2025

இன்
அசல் வழக்கு எண்.45/2017
-----

அய்யர் ... மனுதாரர்/ பிரதிவாதி

/ எதிர்/

1. அய்யம்மாள்
2. பூபதி (இறப்பு)
3. அய்யர்
4. செல்லத்துரை
5. சின்னத்துரை
6. முனியராஜா .... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இறுதியாக, இம்மனு 10.07.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.மாதவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.S இளங்கோவேல்ராஜன் அவர்கள் ஆஜராகியும் இருந்த நிலையில், இருதரப்பு தரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும்,

வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில், CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் முடிக்கப்பட்ட வா.சா.2 சாட்சி விசாரணையை மீண்டும் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வா.சா.2ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க ஏதுவாக .வா.சா.2ஐ மீண்டும் recall செய்ய வேண்டி கட்டளை 18 விதி 17ன் கீழ் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சி விசாரணையை மீண்டும் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வா.சா.2ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க ஏதுவாக வா.சா.2ஐ recall செய்ய வேண்டி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், மனுதாரர்/பிரதிவாதி தரப்பு இம்மனுவானது நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை அனுமதிக்கக்கூடாது என்றும் ஆட்சேபனை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.3) இருதரப்பு மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**2) தீர்வு**

2.1) இம்மனுவானது வா.சா.2ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.2, வாதி தரப்பில் 25.03.2025ல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அன்றைதினம் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்/பிரதிவாதிக்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. பின்னிட்டு வா.சா.2 குறுக்கு விசாரணைக்காக 01.04.2025 மற்றும் 16.04.2025க்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. 16.04.2025 அன்று வா.சா.2 ஐ மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்பதால்,

வா.சா.2 சாட்சி விசாரணையானது நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

2.2) மேற்படி வா.சா.2 ஆனவர் பெண்பால் ஆன 85 வயதான மூத்த குடிமகள் ஆவார் என்றும், தற்போது அவர் வயதின் காரணமாக உடல்நிலை குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும், வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்/பிரதிவாதிக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்கு விசாரணை காலம் கடத்துவதற்காகவும், வா.சா.2ஐ அலைக்கழிக்கும் விதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும், வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்/பிரதிவாதிக்கு போதிய வாய்ப்பு அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், வா.சா.2 ஆனவர் 85 வயதுள்ள மூத்த குடிமகள் என்பதை கருத்தில் கொண்டும், அசல் வழக்கானது 2017 முதல் நிலுவையில் இருந்துள்ளதை கருத்தில் கொண்டும், இம்மனுவானது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 11.07.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஓம். E.மணிகண்டன்)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**<u>இணைப்பு</u>:–**
**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

(ஓம். E.மணிகண்டன்)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.7/2025
இன்
அசல் வழக்கு எண்.45/2017
செவ்வை உத்தரவு
நாள் : 11.07.2025